OS .No. 23/2020 நாள் : 16.03.2026

**PW1 – அப்துல் ரசீது**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கு தாக்கல் செய்தபோது நான் தற்போது வசித்து வரும் திருப்பூண்டியில் உள்ள முகவரியைத்தான் கொடுத்துள்ளேன். அதற்கு முன்பும் நான் திருப்பூண்டியில்தான் இருந்தேன். தாவா 1வது அயிட்ட சொத்தான சிக்கல் வீட்டில் எந்த காலத்திலும் வசித்ததில்லை என்றால் சரிதான். எனது அப்பா இருக்கை கிராமத்தில் சொத்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு சொத்து கொடுக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாவா 2வது அயிட்ட சொத்தான இருக்கை கிராமம் பழைய புல எண்,275, புதிய புல எண்.51/3 நத்தம் மனை மற்றும் வீடு சொத்தினை எனது திருமண சமயத்தில் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. முஸ்தபா என்ற நபரை எனக்கு தெரியாது. தாவா 2வது அயிட்ட சொத்தான இருக்கையில் உள்ள வீட்டினை இருக்கை கிராமத்தை சேர்ந்த வகாப் அவர்களின் மகன் முஸ்தபா என்பவருக்கு கடந்த 1996ல் விற்பனை செய்து விட்டேன் என்றால் சரியல்ல. இந்த விவரம் தெரிய வந்தால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்காது என்பதால் அதனை மறைத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கிற்கு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்களை நான் படித்துப் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். அதனை படித்துப்பார்த்துவிட்டு திருத்தல் மனுவை நான் தான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

இருக்கை கிராமத்தில் உள்ள வீட்டில் முஸ்தபா தற்போது குடியிருந்து கொண்டு பிரச்னை செய்து வருகிறார் என்றால் சரிதான். அதனால் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.